பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 11 | சனிக்கிழமை | 24.02.2024 | அதிர்வு 207 |
|---|---|---|---|---|---|


### வீடொன்றில் போதைப்பொருளுடன்

## பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட ஏழு பேர் கைது!

கற்பிட்டி – நுரைச்சோலை, ஆலங்குடா பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றில் இருந்து போதைப்பொருளுடன் இளம் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட ஏழு பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பொலிஸ் 06▶





## சிறீதரனின் வெற்றிக்கு மிகவும் பாடுபட்டவர் சார்ள்ஸ்

### ரணில் பகிரங்கமாகத் தெரிவிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான போட்டியில் சிவஞானம் சிறீதரன் எம்.பி. வெற்றி பெற மிகவும் பாடுபட்டவர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சில நாட்களுக்கு முன் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்றத்துக்குச் சென்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 06▶

## மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட ஆட்சியில் மாற்றம் மிக அவசியம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

**"ஜனாதிபதி, பிரதமர் என்ற எந்தப் பதவிகளும் எனக்குப் பெரிது இல்லை. வறுமையில் வாடும் மக்கள் அதிலிருந்து மீண்டெழுந்து நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம். அந்த நிலைமையை ஏற்படுத்தவே ஆட்சியில் கட்டாயம் மாற்றத்தை ஏற்படுத்தப் போராடுகின்றோம்."**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.** 06▶



## சாந்தன் இலங்கை வருவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன் 2022இல் உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின்பேரில் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னர், அவர் திருச்சியில் 06▶



தெற்கில் ரஷ்யர்களால் நடத்தப்படும் ஒரு ஹோட்டலில் இன்று நடக்க ஏற்பாடாகியிருந்த ஒரு 'பார்ட்டி' பொதுத் தரப்புகளின் கடும் எதிர்ப்பு மற்றும் ஆட்சேபனைகளால் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

'வெள்ளை நிறத்தவர்களுக்கு மட்டும்' என்ற கருப்பொருளின் 'ஓப்பனிங் வைட் பார்ட்டி' என்று விளம்பரப்படுத்தப்பட்ட அந்த ஒன்று கூடல் களியாட்ட நிகழ்வு பொது 06▶



# கச்சதீவு திருவிழா ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

திருப்பலி நிகழ்வு இன்று காலை ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா நிறைவு பெறும்.

இந்தத் திருவிழாவுக்குப் பெருமளவு பக்தர்கள் வருகை தந்துள்ளனர்.

பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

















# சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை



சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக் கொடுப்பவர்கள் மற்றும் அவ்வாறான கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதி காரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு சில நியதிகளின் அடிப்படையில் உரிய செயன்முறைக்கமைய தெரிவு செய்யப்படும் சிறப்புக்குரிய இலங்கை பிரஜைகளுக்காக ஜனாதிபதியால் சில விருதுகள் மற்றும் கௌரவ நாமங்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறான பெயர்களில் சில நபர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத் துக்கு அறிய கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் தேசிய விருதுகளுக்காக பயன்படுத்தப்படும் கௌரவ நாமங்களை வேறு தரப்பினர் தவறாகஓ பயன் படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியு றுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் முறையற்ற விதத்தில் விருதுகள் வழங்கப் படுகின்றமை இதுவரையில் இலங்கையில் கௌரவிப்புக்கு பாத்திரமானவர்களுக்கு செய்யும் அநீதியாகவும் அவமரி யாதையாகவும் அமைவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதி பதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# மாமியாரை அடித்துக் கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய மருமகன் வாகனேரியில் சம்பவம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாக னேரி பிரதேசத்தில் மருமகன் மாமியாரை அடித்துக் கொலை செய்துவிட்டுத் தப்பி ஓடிய சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனேரி கூளையடிச்சேனையைச் சேர்ந்த 45 வயது டைய வைரமுத்து கோமதனி என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இவரின் மகள் திருமணம் முடித்து இரு குழந்தைகள் உள்ள நிலையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளார். அவரது தாயாருடன் குழந்தைகள் மற்றும் அவரது கணவன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருமகன் மதுபோதையில் மாமியாருடன் தினமும் சண்டையிட்டு வந்தார் எனக் கூறப்பட்டது. சம்பவதி னமான நேற்று இரவும் மாமியார் வீட்டில் தனிமையில் இரந்துள்ளபோது மது போதையில் வந்த மருமகனுக்கும் மாமியாருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. மாமியாரின் தலை மீது பாரிய பொருள் ஒன்றால் தாக்கியதையடுத்து அவர் உயிரிழந்தார். 30 வயதுடைய மருமகன் அங்கி ருந்து தப்பிஓடியுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அயவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தமை யையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் நீதிமன்ற அனு மதியைப் பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்கு வைத் தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# யாழில் அழுகிய நிலையில் பெண்ணொருவரின் சடலம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அழுகிய நிலையில் பெண் ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சின்னத்துரை ஜெகதீஸ்வரி என்ற 66 வயதுடைய பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது இறப்புக்கான காரணம் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்நிலையில், மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம குமார் மேற்கொண்டார்.




# கனடா - மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை திறப்பு

கனடா – மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணை நேற்று மட்டக்களப்பு திறைமடுவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பண்ணை வடக்கு, கிழக்கு பொருளாதார மேம்பாட்டு நடுவகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது.

திறப்பு விழாவில் இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் டானியல் பூட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தி.சரவணபவன், கனேடியத் தமிழ்ப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டாண்டன் துரைராஜா, பொருளாளர் திருக்குமரன் திருநாவுக்கரசு, முன்னாள் தலைவர் சத்தியமூர்த்தி உமாசுதன், இலங்கைக்கான திட்ட இணைப்பாளர் துஷ்யந்தன் துரைரத்தினம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.















# செங்கடல் நடவடிக்கையில் இலங்கை வழங்கும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார் அமெ. பிரதிநிதி

இந்து சமுத்திரத்தில் கடல் பயணத்தை சுதந்திரமாக மேற்கொள்ள இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மாவை  சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு வாரத்திற்குள் இலங்கைக்கு வருகை தந்த நான்காவது அமெரிக்க பிரதிநிதி ரிச்சர்ட் வர்மா என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

சர்வதேச பாதுகாப்புத் தொடர்பான விடயங்களும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. செங்கடலில் இடம்பெறும் கடற்படை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு பிரதி இராஜாங்க செயலாளர் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளித்து, இந்து சமுத்திரத்தின் சுதந்திரமான கடற்பயணத்திற்கு இலங்கை தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் இதன்போது பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் உள்ளிட்ட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளருக்கு இதன்போது விளக்கமளித்துள்ளார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் யூ.எல்.எம். ஜோஹர், சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் சதுர் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்ப்பு தீவிரமடைந்தமையால் கைவிடப்பட்டிருக்கின்றது.

முகக் கட்டுப்பாட்டுக் கொள்கையை செயல்படுத்த அந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் உத்தேசித்து இருந்தார்களாம்...!

'ஃபேஸ் கன்ட்ரோல்' என்பது பொதுவாக உயர்தர இரவு விடுதிகளில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். தனிநபர்களின் தோற்றம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அகநிலை மதிப்பீடுகளின் அடிப்படையில் நுழைவை ஒழுங்குபடுத்தும் நடைமுறையை இது குறிக்கிறது.

முகக்கட்டுப்பாட்டுக் கொள்கையைச் செயல்படுத்த அமைப்பாளர்கள் உத்தேசித்திருந்திருக்கின்றார்கள். நிகழ்வில் பங்குபற்ற வருவோரின் வெள்ளைத் தோல், செல்வம், நடை அல்லது நடத்தை, மிடுக்கு ஆகியவற்றின் அடிப்படையில் நுழைவு கட்டுப்படுத்தப்படவிருந்தது.

3000 ரூபா நுழைவுக் கட்டணம், குறிப்பிட்ட இன மற்றும் நிதித் தகுதிகளைக் கொண்ட நபர்களை மட்டுமே பங்கேற்க அனுமதிக்கும் வகையில், கடுமையான நுழைவுஅளவுகோல்களைச்செயல்படுத்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டிருந்தனர் என அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

"நாங்கள் 24-02 -2024 அன்று ஒரு ரஷ்ய ஓட்டலில் வெள்ளை முகக் கட்டுப்பாட்டுடன் ஒரு சிறிய வெள்ளை விருந்து நடத்த முடிவு செய்தோம். மேலும் இனவெறி பற்றிய ஊதிப்பெருப்பித்த கருத்தின் பின்னணியில் நிறைய எதிர்ப்புகளை எதிர் கொண்டோம். அதனால் வெள்ளைப் பார்ட்டி ரத்து செய்யப்பட்டது. யாருடைய உணர்வுகள் புண்படுத்தப்பட்டிருந்தால் அவர்களிடமும் ஏனைய அனைவரிடமும் நாம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றோம்" - என ஏற்பாட்டாளர்கள் இப்போது கூறுகின்றனர்.

இந்த நாட்டின் எதிர்காலம் எங்கே செல்கிறது?

\+ + +

தேசியப் பட்டங்கள் மற்றும் கௌரவப் பட்டங்களை முறையற்று வழங்கி வருபவர்கள் மற்றும் பெற்றுக் கொண்டவர்கள், பயன்படுத்துவோர் ஆகியோருக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்து, இந்நிலைமை தொடராதிருப்பதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து கடும் உத்தரவு வந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

உத்தரவு மிக உயர்மட்டத்திலிருந்து வந்திருப்பதால் குறைந்த பட்சம் கண்துடைப்புக்காவது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

வடக்கிலும் பல 'கல்(ல்)லாநிதி'களுக்கு காத்திருக்கின்றது கஷ்டகாலம் போலும்...!

## சாந்தன் இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

சாந்தனுக்கு கடந்த மாதம் 24ஆம் திகதி உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருச்சி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உயர் சிகிச்சைக்காகச் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்ட அவர், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். கல்லீரல் செயலிழப்புக்கு உள்ளான சாந்தனுக்குப் பல்வேறு உடல் நலப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று மருத்துவர்கள் கூறினார்.

இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், சுவாச சுழற்சி உள்ளிட்டவை சீராக இருக்கின்றன என்றும், அதேவேளையில் பிற பாதிப்புக்களுக்குத் தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் இலங்கையைச் சேர்ந்த சாந்தனை நாட்டுக்கு அனுப்ப இந்திய மத்திய அரசு அனுமதிக் கடிதத்தை அனுப்பியுள்ளது. உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் இந்திய மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

# இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு!



யாழ்ப்பாணம், சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் 29 வயதான இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

## சிறீதரனின் வெற்றிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டம் முடிந்ததும் அவரது அறையை நோக்கி அவர் விரைந்தார். அப்போது ஜனாதிபதியின் அறைக்கு அருகில் ஜனாதிபதியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

சார்ள்ஸைக் கண்டதும் ஜனாதிபதி, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வருங்காலத் தலைவர் வந்து நிற்கின்றார்" - என்றார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரா?" என்று கேட்டார்கள் ஜனாதிபதியுடன் வந்தவர்கள்.

"ஆம்... இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான போட்டியில் சிறீதரன் எம்.பியின் வெற்றிக்கு மிகவும் பாடுபட்டவர் இவர்தானே...." என்று பதிலளித்தார் ஜனாதிபதி.

அப்படியே சார்ள்ஸ் நிர்மலநாதனை அறைக்குள் அழைத்துச் சென்று உரையாயாடினார் ஜனாதிபதி.

வடக்கின் அபிவிருத்திக்குப் புலம் பெயர் தமிழர்களை உதவச் சொல்லுங்கள் என்று சார்ள்ஸ் எம்.பியிடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். - என்றுள்ளது.

## பொலிஸ் கான்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைமையகத்தில் கடமையாற்றும் இளம் கான்ஸ்டபிளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலங்குடா பகுதியில் உள்ள கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் வீடொன்றில் இளைஞர்கள் குழுவொன்று போதைப் பொருள் பாவிக்கின்றது என்று நுரைச்சோலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அந்தத் தகவலின் அடிப்படையில் அந்த வீட்டைச் சுற்றிவளைத்த நுரைச்சோலை பொலிஸார், அங்கு தங்கியிருந்த ஏழு பேரைக் கைது செய்தனர்.

அவர்களில் 6 பேர் நுரைச்சோலை மற்றும் ஆலங்குடா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் ஐஸ் போதைப்பொருள் பாவித்தமை கண்டறியப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்ட இளம் பொலிஸ் கான்ஸ்டபிளிடம் சோதனையிட்டபோது 1 கிராம் 200 மில்லி கிராம் கஞ்சா இருந்துள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

நுரைச்சோலை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் எல்.பஷ்பநாதன் தலைமையிலான பொலிஸார் மேதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்கள் நிம்மதிப் பெரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபஞ்சம்தகவல்தொழிநுட்பவேலைத் திட்டத்தின் 108 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள்,அவிசாவளை, சீதாவக்க தெற்கு, புவக்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் ஏறக்குறைய 40 சதவீதமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஏழ்மையடைந்தோர் எண்ணிக்கை 30 இலட்சத்தில் இருந்து 70 இலட்சமாக அதிரித்துள்ள. நாட்டில் வறுமை தலைவிரித்தாடியுள்ள இவ்வேளையில், நாட்டை ஆளும் தரப்பினர் மக்களின் துயரங்களைக் கண்டு கொள்ளாதுள்ளனர்.

ஒரு நாடு சரியாகக் கட்டமைக்கப்படும்போது, சமூகத்தில் ஏற்படும் வீழ்ச்சியில் சமூகத்தில் உள்ள செல்வந்தர்களும் பெரும் பணம் படைத்தவர்களுமே கூடிய பங்களிப்பை ஆற்ற வேண்டும். உழைக்கும் மக்கள் இன்று வங்குரோத்து நிலையின் சுமைகளைச் சுமக்கின்றனர். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் கூட பெரும் பணக்காரர்கள் பாதிக்கப்படாது உழைக்கும் மக்களின் நிதியங்களில் கூட கைவைத்துள்ளனர். மக்கள் படும் துன்பங்களை இந்நாட்டுத் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையும். நாட்டில் சீனி, எரிவாயு, உரம், பூண்டு, எரிபொருள், எண்ணெய், நிலக்கரி மற்றும் மருந்துகள் போன்றவற்றில் மோசடிகள் நடந்துள்ளன. பொதுமக்களுக்குத் தரம் குறைந்த மருந்துகள் வழங்கப்படுகின்றன. சுகாதார அமைச்சருக்கு சிங்கப்பூரில் இருந்து மருந்துகளைக் கொண்டு வருகின்றனர். இந்தக் கலாசாரம் மாற்றப்பட வேண்டும்.

அரசியல்வாதிகள் என்றால் சலுகைகளை அனுபவித்து வருகின்றவர்கள் என்ற நோக்கு மக்களிடம் இருந்து வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அரசில் அந்த பிம்பங்களை மாற்றி சலுகைகளைத் தேடுவதை விட மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதிகளை உருவாக்குவோம்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கோட்டா வழியில் சஜித்தும்

அரசியலில் வெல்வதற்காக எந்தத் தந்திரமும் செய்வார்கள். இது பொதுவான பண்பியல்பு.

வெற்றியை மட்டும் இலக்காக வைத்து, சேரக்கூடாத தரப்புகள் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளும் அற்பத்தனமும் அரசியலில் அரங்கேறும் விடயம்தான்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கூட வரும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படியும் வெற்றியீட்டி விட வேண்டும் என்பதற்காகச் சேரக்கூடாத தரப்புகளை எல்லாம் சேர்த்து, தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துகின்றார் போலத் தோற்றுகின்றது.

தேர்தல் வெற்றிக்காக சிக்கலான - சர்ச்சைக்குரிய - தரப்புகளுடன் கூட்டணி அமைப்பது வேறு. அது கூட ஆபத்தானதுதான்.

ஆனால், ஏற்கனவே பெரும் சர்ச்சைகளுக்கு உள்ளானதரப்புகளை, அவர்கள்தன்னை ஆதரிக்க முன் வருகின்றார்கள் என்ற நம்பிக்கையை மட்டும் வைத்து, அவர்களைக் கட்சிக்குள்ளேயே சேர்த்துக் கொள்வது என்பது வேறு. பின்னது பல நெருக்கடிகள் - சிக்கல்களை - ஏற்படுத்த வல்லது.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நாட்டில் கொடூர யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்திகளை எல்லா வழிகளிலும் - எல்லா முறைமைகளைப் பயன்படுத்தியும் - அழிப்பதற்காக போராடிக் கொண்டிருந்த படையினருக்கு - குறிப்பாக படைகளின் உயர்மட்ட தளபதிகளுக்கு - நாட்டில், தென்னிலங்கையில், மிகுந்த முக்கியத்துவம் இயல்பாகவே கிடைத்தது. அது அப்போது ஆச்சரியத்திற்கோ, ஆட்சேபத்துக்கோ உரியதாக இருக்கவில்லை.

யுத்தம் முடிந்து சுமார் பத்து ஆண்டுகளில் படைத்தரப்பினரின் முக்கியத்துவம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. படைத்துறையின் நாட்டுக்கான தேவை - அர்ப்பணிப்பு - அவசியம் - என்பன குறையத் தொடங்கியதும், நாட்டில் - குறிப்பாக தென்னிலங்கையில் - அவர்களின் முக்கியத்துவமும் வகிபாகமும் கூடக் குறையத் தொடங்கின.

இந்தப் பின்புலத்தில்தான் படைத்தரப்பின் ஒய்வு பெற்ற அதிகார வர்க்கம் மெல்ல முன்னாள் படை அதிகாரியும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவின் உடையில் தொங்கிக்கொண்டு மெல்ல ஆட்சி அதிகாரத்துக்குள்ளும் நிர்வாகத்துக்குள்ளும் தலைநீட்ட தொடங்கியது. சிவில் நிர்வாக அதிகாரிகளின் பதவிகள் எல்லாம் முன்னாள் படை அதிகாரிகள் கைகளுக்கு மாறின. நாட்டின் வெளிவகாரச் செயலாளராக ஒய்வு பெற்ற படை அதிகாரி ஒருவரே நியமிக்கப்படும் அளவுக்கு நிலைமை போனது. கோட்டாபயவின் ஆட்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி விரைந்து பற்றிப் பீடித்து விஸ்வரூபம் எடுத்தமைக்கு நாட்டின் சிவில் நிர்வாகம் முன்னாள் படை அதிகாரிகளின் கைகளுக்கு முழுமையாக மாற்றமடைந்தமையால் ஏற்பட்ட கருத்து நிலைப்பாடும் ஒரு காரணமாகும்.

நாட்டின் சிவில் நிர்வாகத்தின் கணிசமான பகுதிகளை ஒய்வு பெற்ற மற்றும் சேவையில் இருக்கின்ற படை அதிகாரிகளின் கைகளுக்கு மாற்றி, சிவில் நிர்வாக முறைமையையே குழப்பத்துக்கு உட்படுத்தினார் கோட்டாபய ராஜபக்ஷ.

அந்த அனுபவப் பட்டறிவிலிருந்து பாடம் படிக்காதவராக இருக்கின்றாரோ சஜித் பிரேமதாஸ என்று எண்ணும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

வரிசையாக ஒய்வு பெற்ற இராணுவ ஜெனரல்களை தனது கட்சியில் சேர்த்து, அவர்களைத் தமக்கு ஆலோசகர்களாக - நெருக்கமாக - அரவணைத்து வைக்கும் வேலையை ஆரம்பித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாளைக்கு தேர்தலில் அவர் வென்று ஜனாதிபதியானால், அவரது ஆலோசகர்களாக இப்போது நியமனம் பெற்றுள்ள இராணுவ ஜெனரல்கள் எல்லாம் அப்போது நாட்டின் சிவில் நிர்வாகிகளாக - ஜனாதிபதியின் ஆலோசகர்களாக - ஆட்சித் தரப்புக்குள் - தர்பாருக்குள் - முக்கிய இடங்களுக்கு வருவார்கள் என்ற செய்திதான் இப்போது கட்சிக்குள் வரிசையாக சஜித் வழங்கும் நியமனங்கள் எடுத்துரைக்கின்றன.

எந்தக் குதிரையில் ஏறி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சறுக்கி விழுந்தாரோ, ஒய்வு பெற்ற படை அதிகாரிகள் என்ற அதே குதிரையில் ஏறுவதற்குத்தான் சஜித் பிரேமதாஸவும் திட்டம் போடுகின்றார் போலும்.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து நாட்டை மீட்டவர்கள் என்ற கதாநாயக அந்தஸ்து யுத்த கால படைத் தளபதிகளுக்கு இருக்கலாம். அதைத் தென்னிலங்கை மக்களும் சில சமயங்களில் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் அதனை ஏற்க மாட்டார்கள். யுத்த கால படை அதிகாரிகள் தமிழர்களைப் பொறுத்த வரை யுத்தக் குற்றவாளிகளே.

அவர்களோடு அணி சேர்ப்பவர்களைத் தமிழ் பேசும் மக்கள் அங்கீகரிக்கவே மாட்டார்கள்.

தமக்கு இருக்கும் - தமக்குக் கிடைக்க கூடிய - சிறுபான்மையினரான தமிழர்களின் வாக்குகளையும் ஆதரவையும், இப்போதைய நடவடிக்கைகள் மூலம் - ஒய்வு பெற்ற படை அதிகாரிகளைத் தமது கட்சியில் சேர்த்து அவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் - இழக்க ஏற்பாடு செய்கின்றார் சஜித் பிரேமதாஸ...!




**1. உரலார் கேள்வி :- தமிழரசுக் கட்சியின் பதவித் தேர்வுகளை ஆட்சேபித்து நீதிமன்றில் வழக்குத் தொடுத்தவர்கள் சுமந்திரனதும், சாணக்கியனதும் ஆதரவாளர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் சுமந்திரனோ தான் கட்சிக்காக நீதிமன்றில் வழக்காடுவேன் என்று அறிக்கை விட்டுள்ளார். அங்கு என்ன நடக்கிறதென்று உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?**

**உலக்கையார் பதில் :-** இடியப்பச் சிக்கல் தான். இடியப் போகிற வீட்டில் முதலில் அங்காங்கு வெடிப்புகள் தோன்றும். தமிழரசுக் கட்சியிலும் அதுதான் நடக்கிறது. வரவர அங்கு வெடிப்புகள்



பெரிதாகிக் கொண்டே போகின்றன. இப்படியே போனால் 'வீடு' விழப்போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்று தோன்றுகிறது.

சுமந்திரன், 'பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார்' என்கிறார்கள். அதுபற்றிய உண்மை ஏதும் எனக்குத் தெரிய வில்லை. ஆனால் ஒன்று, சுமந்திரன் அப்படிச் செய்கிறார் என்றால் அவர் பெரிய தவறு செய்கிறார் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

பகையை வெளிப்படையாய்க் கையாளாமல் தந்திரமாய்க் கையாள்பவர்களை மக்கள் மதிக்க மாட்டார்கள். ஓர் அரசியல் தலைவருக்குப் புத்திசாலித்தனம் அவசியம்தான்!. ஆனால் தந்திரம் மிக்க அதிபுத்திசாலித்தனம் மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்ச்சியைத்தான் தோற்றுவிக்கும்.

முன்பு தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்த மூதறிஞர் ராஜாஜியைப்பற்றி சிலர், 'ராஜாஜிக்கு உடம்பெல்லாம் மூளை. மூளையெல்லாம் சிந் தனை. சிந்தனையெல்லாம் வஞ்சனை' என்று கிண்டலாய்ச் சொல்வார்கள். அவரது அந்த அதிபுத்திசாலித்தனமும் பின்னாளில் மக்களால் ரசிக்கப்படாமல் போயிற்று.

நம் நாட்டு மூத்த தமிழ்த் தலைவர்களான தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகிய இருவரிலும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் செல்வாவை விட அதி புத்திசாலியாய் இருந்தார். ஆனால் அந் தப் புத்திசாலிதனத்துக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பெரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை.

ஜீ.ஜீ. அவர்கள் தேர்தல் பரப்புரைக்காகச் செல் லும் போது, ஒரு வீட்டினுள் புகுந்து தனக்கான ஆதரவைக் கேட்பாராம். அத்தோடு அந்த வீட்டுக் காரரிடம் அடுத்த வீட்டில் இருப்பவர்கள் பற்றிய விவரங்கள் முழுவதையும் கேட்டறிந்து கொள்வாராம்.

பின்னர் அடுத்த வீட்டிற்குள் நுழையும் போதே, தான் அவர்களுக்கு நெருக்கமானவர் என நினைக்கச் செய்ய, அவர்களை உரிமையாய்ப் பெயர் சொல்லி அழைத்து கொண்டே உள் நுழை வாராம். அது மட்டுமல்லாமல் அவர்களது பிள்ளை களின் படிப்பு, தொழில் முதலியவை பற்றியெல்லாம் அக்கறையுடன் விசாரிப்பாராம். அந்த வீட்டுக் காரர்கள், ஐயா! எங்களைப் பற்றியெல்லாம் முழுமை யாகத் தெரிந்து வைத்திருக்கிறாரே என மயங்கிப் போவார்களாம். சிலர் சொல்லக் கேள்விப்பட்டி ருக்கிறேன்

ஆனால் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அந்த அதி புத்திசாலித்தனம் நம் மக்களாலும் பெரியளவில் விரும்பப்படவில்லை. மென்மையாகவும், எளிமை யாகவும், இயல்பாகவும் இருந்த தந்தை செல்வா வைத் தான் மக்களுக்கு அதிகம் பிடித்தது.

இவையெல்லாம் வஞ்சனையாய்ச் செயற்படும் அதி புத்திசாலிகளை மக்கள் விரும்ப மாட்டார்கள் என்பதற்கான முன் உதாரணங்கள். பிரச்சினைகள் வரும்போது தந்திரங்கள் செய்யாமல், நேர்மையாக அவற்றைக் கையாள்வதுதான் மக்கள் மனதை வெல்வதற்கான சுலபமான வழி என்று நினைக் கிறேன்.

நீங்கள் சொன்ன பிரச்சினையில் சுமந்திரன் பின்னணியில் இருந்து செயற்பட்டுவிட்டுப் பின்னர் கட்சிக்காக வழக்காடுவேன் என்று சொல்வது உண்மையானால் அது அவருக்கு அவரே வெட்டிக் கொள்ளும் புதைகுழியாய்ப் போகப்போகிறது.

**சல்லடையார் சலிப்பு :- சுமந்திரன் தன்ர ஆள் என்றும் பார்க்காமல் துணிவா இப் படிக் 'கழுவி ஊத்துறாரே'. வாரிதியாரின் தராசு நடுநிலையாய்த் தான் இருக்கிறது.**

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

**(09ஆம் பக்கம் பார்க்க)**

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**2. உரலார் கேள்வி :- இந்தியாவை மெல்ல மெல்ல இந்து நாடாக ஆக்க முயல்வது சரிதானா?**

**உலக்கையார் பதில் :-** அதில் தவறென்ன இருக்கிறது? இந்தியாவைப் புதிதாக யாரும் இந்து நாடாக ஆக்க வேண்டிய அவசியமில்லை. அது ஏற்கனவே இந்துநாடாகத் தான் இருக்கிறது.

இந்தியா இந்து சமயத்தின் தளமாக இருக்கும் ஒரு நாடு என்பதை எவர் மறுக்க முடியும்? வரலாற்று ஆராய்ச்சியாளர்கள், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே அங்கிருந்த இந்து மத அடையா ளங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வடக் கிலும் சரி, தெற்கிலும் சரி, கிழக்கு, மேற்குகளிலும் சரி அங்கு எல்லா இடங்களிலும் வரலாற்றுத் தொன்மைமிக்க இந்து மதக் கோவில்கள் நிரம்பிக் கிடக்கின்றன.



அடியார்கள், ஆழ்வார்கள் எனத் தமிழ் நாட்டில் இந்துமதத்தை வளர்த்த பெரியவர்களைப் போன்ற பலர் இந்தியா முழுவதிலும் விரவி இருந்திருக் கிறார்கள். அங்குள்ள புனித நதிகள், மலைகள் எல்லாம் கூட இந்து மத வரலாற்றில் பதிவாகி இருக்கின்றன. அங்குள்ள விலங்குகள், பறவைகள் மட்டுமன்றி மரங்களும், கற்களும் கூட இந்து சமய வரலாற்றோடு தொடர்புள்ளவையாய்ப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், தர்மசாஸ் திரம் என இந்து மதத்தின் அடிப்படை நூல்கள் எல்லாம் அங்குதான் தோன்றி வளர்ந்து நிலைத் திருக்கின்றன. பண்டைய காலந்தொட்டு அங்குள்ள மக்களில் பெரும்பான்மையோர் இந்துசமய வழிபாட்டு முறையையும், ஆசாரங்களையும், சீலத்தையும்தான் தொடர்ந்து பின்பற்றி வரு கிறார்கள்.

இவையெல்லாம் இன்று நேற்றுப் பதிவான விடயங்கள் இல்லை. தொன்றுதொட்டு வரும் விடயங்கள். அப்படியிருக்க இந்தியாவை இந்து நாடு எனச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

மத்திய கிழக்கு நாடுகள் தம்மை இஸ்லாமிய நாடுகள் எனப் பகிரங்கமாக அறிவிக்கின்றன. மேற்கு நாடுகள் தம்மைக் கிறிஸ்தவ நாடுகளாகத் துணிந்து வெளிப்படுத்துகின்றன. நம் நாடு தன்னைப் பௌத்த நாடு எனப் பகிரங்கப் படுத்தியிருக்கிறது. மேற் சொன்ன நாடுகளில் பல தம் நாட்டில் மற்றைய சமயங்களின் வழிபாட்டிற்கே தடை விதித்திருக்கின்றன. இவற்றை யாரும் பிழை சொல்வதில்லை. இந்தியாவை இந்து நாடு என்று சொன்னால் மட்டும் ஏனோ சிலர் குற்றம் சாட்டப் பாய்ந்து வருகிறார்கள்.

சிறுபான்மையினருக்கு உரிமையும், மதிப்பும் கொடுக்கத்தான் வேண்டும். அதற்காக பெரும் பான்மையினரின் உரிமையை மறுப்பதென்பது ஏற்க முடியாததொன்று என்றே கருதுகிறேன்.

**சல்லடையார் சலிப்பு -கள்ளமில்லாத வெளிப்படையான உறுதியான பதில். வாரி தியாரின் துணிவு பாராட்டத்தக்கது.**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- இந்த நூற்றாண்டின் ஆச்சரியப்படத்தக்க புதுமையாக எது இருக்கப் போகிறது?**

**உலக்கையார் பதில் :-**'ஏலியன்ஸ்' என்று சொல்லப்படுகின்ற வெளிக்கிரக வாசிகளின் வருகைதான் அத்தகைய புதுமையாக இருக்குமென நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நூற்றாண்டின் 'ஐன்ஸ்டீன்' என்று சொல்லப்பட்ட மறைந்த விஞ்ஞானி 'ஸ்டீபன் ஹாக்' இது பற்றி ஏற்கனவே சொல்லி விட்டுப் போய் விட்டார். 'ஏலியன்ஸ்களாலும், செயற்கை அறிவூட்டலினாலும் பூமிக்குப் பேராபத்து நிகழ இருக்கிறது' என்று அவர் சொன்ன கூற்று உண்மையென்றே நான் கருதுகிறேன். அவர் சொன்ன இரண்டில் ஒன்று மிக விரைவில் நடக்கப் போவதாய் எனது உள் மனம் சொல்கிறது.

ஆய்வாளர்கள் ஏற்கனவே ஏலியன்ஸ்கள் பூமிக்கு வரத் தொடங்கிவிட்டார்கள் என்கிறார்கள். அடிக்கடி பலநாடுகளிலும் பறக்கும் தட்டுக்கள் இனங்காணப்பட்டுள்ளன. அமெரிக்க விமானப்படை, கடற்படை ஊழியர்கள் கூட அதனை உறுதி செய்திருக்கிறார்கள்.

சொன்னால் நம்பமாட்டீர்கள், 1993 அல்லது 1994 என்று நினைக்கிறேன் யாழில் போர் கடுமையாக நடந்து கொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் ஒருநாள் இரவு, நாம் ஓர் ஆலயத்தில் பட்டிமண்டபம் நடத்திக் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட நடுச் சாமநேரம். திடீரென பட்டிமண்டபத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள்



எல்லோரும் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள். அவர்கள் எதைப் பார்க்கிறார்கள் என்று அறிய நானும் அண்ணாந்து பார்த்தேன். அப்போது வானத்தில் ஐந்து ஒளிர் பொருள்கள் கிடையாக ஒன்றன் பின் ஒன்றாகப் பறந்து போனதைக் கண்டு வியந்து போனேன்.

எரிகற்களாக இருந்தால் அவை செங்குத்தாகத் தான் பயணித்திருக்கும். நாம் கண்ட ஒளிப் பொருள்களின் கிடைக்கோட்டுப் பயணமும், அவற்றின் பயணவேகத்தில் இருந்த நிதானமும் அவற்றைப் பறக்கும் தட்டுகளாய்த் தெளிவாய் இனங்காட்டின .

இதையெல்லாம் நீங்கள் நம்பவா போகிறீர்கள்? முக்கியமான ஒன்றை மட்டும் சொல்லி விடுகிறேன். கடல் பயணங்கள் செம்மையாவதற்கு முன்பு, கடல்தாண்டி இன்னொரு நிலப் பரப்பு இருப்பதையும், அங்கு மக்கள் வாழ்வதையும் யாரும் நம்பியிருக்கவில்லை. பின்னர் துணிந்த சிலர்

(10ஆம் பக்கம் பார்க்க)

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடல் பயணம் செய்து பிற கண்டங்களைக் கண்டு பிடித்தார்கள்.

அதன் பின்பு அவர்கள் படைபலத்தோடு அங்கு சென்று அங்குள்ளவர்களை அழித்து அல்லது அடக்கி அந்தப் பிரதேசத்தைத் தமக்காக்கிக் கொண்டார்கள். இது நாம் அறிய நடந்த வரலாறு.

அது போலத்தான் ஆகாய வழியாகச் சென்று மக்கள் வாழும் இன்னொரு கிரகத்தைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் இன்று முயன்று வருகிறார்கள். இக் காரியத்தை நாம் மட்டுமல்ல வேற்றுக் கிரகவாசிகளும் செய்வார்கள் என்பது திண்ணம். அவர்கள் நம்மை விட அறிவாளிகளாகவும், பலசாலிகளாகவும் இருக்கும் பட்சத்தில் எமது பூமியை அழித்தோ, அடிமையாக்கியோ கைப்பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றித்தான் இன்றைய வல்லரசுகள் பயப்படுகின்றன.

அப்போதாவது நம் மக்கள் மத்தியில் இருக்கும் இன, மத, ஜாதிச் சண்டைகள் முடிகிறதா என்று பார்ப்போம்.

**சல்லடையார் சலிப்பு - வாரிதியார் புதிதாக என்னென்னமோ சொல்லிப் பயப்படுத்துகிறார். எதற்கும் நாங்கள் வீடுகளில ஒரு பங்கர் வெட்டி வைச்சிருக்கிறது நல்லது பாருங்கோ..**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :-ரம்பாவின் கணவர் யாழ்ப்பாணத்தின் கல்விநிலையை உயர்த்திக் காட்டப் போகிறாராமே?**

**உலக்கையார் பதில் :-** ஏற்கனவே அவர் உயர்த்திக் காட்டிய லட்சணங்கள் எல்லாம் போதும் (பனை மரத்தில் ஏற்றியதைச் சொல்கிறேன்).



யாழ்ப்பாணத்தை அதன் இயல்புப்படி வாழவிட்டால் அது தானாக உயர்ந்து விடும் என்று நினைக்கிறேன். அதற்கு யாரும் இந்தளவு ஆட்டம் போடத் தேவையில்லை.

**சல்லடையார் சலிப்பு -ச்சீ.ய்.ய்.ய். வாரிதியார் இரட்டை அர்த்தத்தில் பேசுறாருங்கோ...**



# சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படும் மட்டக்களப்பு - மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலை

மட்டக்களப்பு – மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலைக்கு நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ் உள்ளிட்ட குழுவினர் நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த வைத்தியசாலையை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும் புனர்வாழ்வு பணியகத்திற்கும் கையளிப்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலைக்கு நீதி அமைச்சருடன் சிறைச்சாலைகள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்டோரும் நேற்றுச் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 98 ஏக்கர் நிலப்பரப்பில் வவுணதீவு வாவியின் நடுவே மாந்தீவு அமைந்துள்ளது. இங்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய தொழுநோய் பிரிவும் நோயாளர்கள் விடுதியும் உள்ளன.

நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலை, நோயாளர் விடுதி, பழமை வாய்ந்த கட்டடங்கள், மதஸ்தலங்கள் உள்ளிட்டவற்றைவிமானப்படையினரின் உதவியுடன் பார்வையிட்டனர்.




# மலையகப் பெருந்தோட்ட பாட்டாளி வர்க்க மக்களை குடித்துக் கும்மாளமடிக்கும் சமூகமாகச் சித்திரிப்பதா?

## மின்சார சபை பேச்சாளர் கருத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(பழுவூரான்)

கடந்த இரு நூறு வருடங்களாக இந்த நாட்டைப் பொருளாதார ரீதியாகத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்ற மலையகப் பெருந்தோட்ட பாட்டாளி வர்க்கத்தை இரண்டு மணிக்குப் பின் குடித்துக் கும்மாளமடிக்கும் சமூகமாகச் சித்திரித்து, நாட்டின் உயர் அதிகாரி ஒருவர் இழிவுப்படுத்திருப்பது வெட்கக் கேடான விடயமாகும் – என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபைப் பேச்சாளர் நோயல் பிரியந்தவுக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை ஹட்டன் அம்பிகா சந்தியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–

மலையகப் பெருந்தோட்ட உழைப்பாளர்கள் ஆளாளுக்கு உதைத்து விளையாடுவதற்கு கால்பந்து அல்லர். அவர்கள் ஒரு காலத்தில் இந்நாட்டுக்கு 80 வீதமான அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தவர்கள். அவர்களின் உழைப்பினால்தான் நாட்டில் இலவசக்கல்வி, இலவச மருத்துவம் எனப் பல சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிகிறது.

அதையெல்லாம் மறந்து ஒட்டு மொத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் குடிகாரர்களாக சித்திரித்திருப்பது மிகவும் கண்டனத்துக்குரியது. நோயல் பிரிந்த எந்த அடிப்படையில் இந்தக் கருத்தை முன்வைத்தார் என்பது தெரியவில்லை. மக்கள் இன்று மின் சாரக் கட்டணத்தை செலுத்துவதற்குக் கூட முடியாத நிலையிலுள்ளபோது அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக சிந்திக்காது அதை திசை திருப்ப ஒரு சமூகத்தை இழிவுப்படுத்த முனைந்துள்ளார்.

இது மிகவும் பாரதூரமான கருத்தாகும். அவர் பதவி விலகுவதும் மன்னிப்புக் கேட்பதுவும் மட்டும் அந்த மக்களுக்கு ஏற்பட்ட மனக்குமுறல்களைத் தணித்து விடாது. இனியும் இதுபோன்ற இழிவான கருத்துக்கள் வெளிவராமல் இருப்பதற்கு இறுக்கமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு மக்களுக்கு அநீதி ஏற்படும்போது உடனடியாக மக்கள் பிரதிநிதிகள் அவற்றை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்காக மட்டுமல்ல, இந்த நாட்டுக்காகவும் உழைத்துக் கொண்டு பதினைந்து லட்சம் மலையகத் தமிழர்களின் பாதுகாப்பு அரணாகவும் இருக்கின்றனர்.

இந்நிலையில் அவர்களுக்குப் பிரச்சினை ஏற்படும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

நாம் உழைப்பதற்கான அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் அல்லர். உணர்வுடன் அவர்களுக்காக களத்தில் நிற்போம். – என்றார்.





# கடந்த ஆண்டில் பத்து லட்சம் மின் இணைப்புகள் துண்டிப்பு

கடந்த ஆண்டில் ஒரு மில்லியன் (பத்து லட்சம்) மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழு உட்பட பல நிறுவனங்கள் துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டன என பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

புதிய மின் இணைப்புகளைப் பெற்றுக்கொள்ளும் போது அதிகளவு பணம் செலவிடப்பட வேண்டியேற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், மின்சார இணைப்பை மீள பெறுவதற்கான கட்டணத்தை ஒரிரு ஆண்டுகளில் தவணை முறையில் செலுத்த அனுமதிக்கும்படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மின் கட்டணம் தொடர்பான பரிந்துரை அடுத்த வாரத்திற்குள் வழங்கப்படுமாம்!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

மின் கட்டணத்தை குறைப்பதற்கான தீர்மானத்தை அடுத்த வாரத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு தெரிவிக்கவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின் கட்டணத்தை குறைப்பதற்கான யோசனை இலங்கை மின்சார சபையினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த யோசனையை மீளாய்வு செய்து தரவுகள் சரிபார்க்கப்பட்ட பின்னரான பரிந்துரைகளை அடுத்த வாரத்திற்குள் இலங்கை மின்சார சபைக்கு வழங்கவுள்ளதாக ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

சில துறைகளில் கடந்த ஒக்டோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணமானது அதே வீதத்தில் குறைக்கப்படுமென மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அண்மையில் தெரிவித்துள்ளார்.

வீடுகள், மதவழிபாட்டுத்தலங்கள், அரச அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் ஹோட்டல்கள் உள்ளிட்டவற்றுக்கு அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் அதே வீதத்தில் குறைக்கப்படுமென அவர் அறிவித்தார்.

# மியன்மாரின் எல்லையை அண்மித்துள்ள முகாமில் தஞ்சமடையும் இலங்கையர்கள்

மியன்மாரில் தாய்லாந்து எல்லையை அண்மித்துள்ள முகாமிற்குத் தொடர்ந்தும் இலங்கையர்கள் செல்கின்றனர் என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜானக்க பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமும் இலங்கையர் ஒருவர் அங்கு சென்றுள்ளார் எனத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போதும் 56 இலங்கையர்கள் அப்பகுதியில் ஆயுதக் குழுக்களின் பிடியில் சிக்கியுள்ளனர்.

இவர்கள் பல்வேறு கணினிக் குற்றச்செயல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றனர் என்ற தகவல் அண்மையில் வெளிக்கொணரப்பட்டது தெரிந்ததே.



# இந்தியாவில் இருந்து மேலும் 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி!

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்தியாவில் இருந்து மேலும் 30 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக 60 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார். ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் இறுதி வரையான காலப்பகுதிக்காக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மொத்தமாக 90 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.




# இன்றைய ராசி பலன்கள் - 24.02.2024

### மேஷம்

உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் இன்று கட்டுப்படுத்த வேண்டும். இன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இந்த அணுகுமுறையின் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாகவும் கவனமாகவும் பணியாற்ற சில சவுகரியங்களை இழக்க நேரும்.

உங்கள் தடுமாறும் உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிபடுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக முதுகுவலி ஏற்படும்.

### ரிஷபம்

இன்று சிறப்பான நாள் அல்ல. விரும்பும் பலன் கிடைக்கும் சூழ்நிலை காணப்படாது. விட்டுக்கொடுத்து போவதன் மூலம் நற்பலனகள் காணலாம்.

பணியிடத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். திறம்பட பணியாற்ற பணிகளை ஒழுங்குபடுத்தி செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதி நிலைமை அதிருப்தியை அளிக்கும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படாது. தலைவலி அல்லது முதுகுவலி பிரச்சினைக்கு ஆளாகலாம். தியானம் மேற்கொள்வது நல்லது.

### மிதுனம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்கள் இலக்குகளை நிறைவேற்றும் தன்னம்பிக்கை உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற நாள்.

பணிகளில் உங்கள் தனிப்பட்ட திறமைகளை காட்டுவீர்கள். இது உங்கள் செயல்திறனில் வெளிப்படும்.

உங்கள் துணையிடம் எதிர்மறை விளைவுகளை வெளிபடுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்லுறவு ஏற்பட இதனை தவிர்த்தல் நலம்.

இன்று பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக காணப்படும். எதிர்பாராத வரவுகள் காணப்படும்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது. இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

### கடகம்

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் வேகம் காட்டக்கூடாது. திறமையுடன் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. இதனால் சில சமயங்களில் உணர்ச்சிவசப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று பணப்புழக்கம் போதுமானதாக இறக்காது. தேவையற்ற செலவினங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இன்று குறைந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. அமைதியாக இருப்பது நல்லது.

### சிம்மம்

இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும் சூழ்நிலை ஏற்படலாம். மனக் குழப்பங்கள் காணப்படும்.

அதிக பணிகள் காணப்படும். நல்ல பலன்களைக் காண திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் பொறுமையிழந்து காணப்படுவீர்கள். இன்று அமைதி காண பொறுமையாய் இருக்க வேண்டும். நேர்மறை எண்ணத்தோடு உங்கள் துணையை அணுகுங்கள்.

இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். உங்கள் சேமிப்பு உயர்த்துவதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களை வருத்திக் கொள்ள வேண்டாம். உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.

### கன்னி

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைகாது. தீய விளைவுகளை தடுப்பதற்கு நீங்கள் ஆழ்ந்து யோசித்து எந்தச் செயலையும் தொடங்க வேணடும்.வார்த்தைகளை தேர்ந்தெடுத்து கவனமாகப் பேசினால் நல்ல விளைவுகள் கிடைக்கும்.

இன்று உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான பேச்சு வார்த்தைகளும் திருப்தியாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் ஒட்டுதலுடன் காணப்படுவீர்கள் மற்றும் அதனை வெளிபடுத்துவீர்கள்.

### துலாம்

உங்கள் முயற்சிகளில்விரும்பத்தக்க பலன்கள் நிச்சயமாகக் கிடைக்கும். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். இன்று புதிய வாய்ப்புகளும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக உள்ளது. உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டங்களை தீட்டலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்களின் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.

### விருச்சிகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் குழந்தைகளைப் பற்றி பெருமை கொள்வீர்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பது நல்ல பலன் தரும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். நீங்கள் பணிகளை எளிதாக மேற் கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் உல்லாசமாக பேசுங்கள். அவருடைய வார்த்தைகளை கவனமாகக் கேட்பதன் மூலம் உங்கள் உறவின் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.02.2024

## தனுசு

இன்று எதிர்பாராத நிச்சயமற்ற நிலைமை காணப்படும். நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இன்றைய சவால்களை சமாளிக்க பொறுமை அவசியம்.

கவனக் குறைவால் பண இழப்பு ஏற்படலாம். எனவே சிறப்பாகப் பணியாற்றக் கவனம் தேவை. உங்களிடம் காணப்படும் அகந்தைப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். உறவில் நல்லிணக்கம் காண இதனை தவிர்த்தல் வேண்டும்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். பொருளாதார பாதுகாப்பிற்காக பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க சத்தான உணவை உண்ண வேண்டும். இன்று அமைதியின்மை மற்றும் சோர்வு காணப்படும்.

## கும்பம்

இன்று உங்கள் லட்சியங்களை அடைவதற்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படும். அதனால் பலன் உண்டாகும்.

உங்கள் பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பாராட்டை பெறுவீர்கள். இன்று உற்சாகமாகப் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும். இந்த அணுகுமுறை மகிழ்ச்சி மற்றும் புரிந்துணர்வை பராமரிக்க உதவும். இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பின் மூலம் சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகை கிடைக்கும்.

இன்று உங்களிடம் சுறுசுறுப்பும் ஆற்றலும் நிறைந்து காணப்படும். அதனால் ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.

## மகரம்

இன்று அதிகமாக சிந்தனை வயப்படும் நிலை காணப்படும். எதையும் எளிதாக எடுத்துக் கொண்டால் நல்ல பலன்கள் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

பணி நிமித்தமான பயணம் சாத்தியம். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். அதனால் சோர்ந்து போவீர்கள்.

உங்கள் இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை மனம்திறந்து கூறுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தொலைதூர நிலுவைப் பணம் கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உட்கொள்வது சிறந்தது.

## மீனம்

இன்று சுறுசுறுப்பான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி எளிதில் கிடைக்கும். எனவே உற்சாகமாக காணப்படுவீர்கள்.

சகபணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக பணியாற்றி உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

மனதில் தேவையற்ற எண்ணங்கள் காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சகஜமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அபரிமிதமாக காணப்படும். இந்த உபரி பணத்தை மங்களகரமான விஷயங்களுக்கு பயன்படுத்துங்கள். இன்று நலமாக இருப்பீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.






# நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் உள்ளனர்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்



நாடளாவிய ரீதியில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் உள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு போலி வைத்தியர்கள் சிகிச்சை அளிக்கின்றனர் என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்கள், நிறைவுகாண் வைத்திய ஊழியர்கள், தாதியர்கள் என சில தரப்பினர் தாம் வசிக்கும் பகுதிகளில் வைத்தியர்களை போன்று செயற்பட்டு சிகிச்சைகளை வழங்குகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதார கட்டமைப்புக்குள் நோயாளர்களுக்கான மருந்துகளை வழங்குவதற்கு துறைசார் அறிவு, பொறுப்பு மற்றும் அதிகாரம் என்பன வைத்தியர்களுக்கு மாத்திரமே காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய எந்தவொரு தரப்பினருக்கும் அதற்கான அதிகாரம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அதிக வெப்பநிலை காரணமாக தண்ணீர் பாவனை அதிகரிப்பு

நாட்டில் தற்பொழுது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக தண்ணீர் பாவனையும் அதிகரித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தொடர்பாடல் முகாமையாளர் சரத்சந்திர முதுபண்டா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா, குருணாகல், புத்தளம், அநுராதபுரம், திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அதிக வெப்பநிலை பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் இயல்பை விட அதிகமாக வெப்பநிலை காணப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் வெளியிடங்களில் தேவையற்ற



விதமாக நடமாடுவதை தவிர்க்குமாறும், அதிக நீரை பருகுமாறும், வெளிர்நிறத்திலான மெல்லிய ஆடையை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பிரித்தானியப் பெண்ணின் நாடு கடத்தும் முயற்சியை தடுக்கும் கோரிக்கை உயர்நீதிமன்றத்தால் நிராகரிப்பு



பிரித்தானியப் பெண் ஒருவரை நாடு கடத்தும் இலங்கை அதிகாரிகளின் நடவடிக்கையைத் தடுக்கும் முயற்சியை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கெய்லி பிரேசர் என்ற பிரித்தானியப் பெண் இந்த நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தியமையுடன், தன்னிச்சையான முறையில் தன்னை நாடு கடத்தும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தீர்மானத்தை இரத்து செய்ய உத்தரவிடுமாறும் கோரியிருந்தார்.

எனினும், மேன்முறையீட்டாளர் பொருள் உண்மைகளை மறைத்து, தவறான உண்மைகளை நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளார் என்று சட்டமா அதிபர் பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுப்பியிருந்தார்.

இந்தநிலையிலேயே உயர்நீதிமன்றம் மேற்படி முறையீட்டை நிராகரித்துள்ளது.

முன்னதாக, கெய்லி பிரேசர் கடந்த 2022 இல் இலங்கையில் சுற்றுலாப் பயணியாக வந்து, காலி முகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் காணொலிகளை வெளியிட்டார்.

இதனையடுத்து பிரேசர், வீசா நிபந்தனைகளை மீறியமைக்காக அவருக்கு வழங்கப்பட்ட விசாவை நிறுத்த முடிவு செய்திருந்ததுடன், 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறுமாறு இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அவருக்கு அறிவித்திருந்தது.

எனினும் அவர் இலங்கையில் மறைந்து வாழ்ந்து வருகின்றார் எனக் கூறப்படும் நிலையில், நாடு கடத்தும் அதிகாரிகளின் உத்தரவையும் ரத்துச் செய்யவேண்டும் என்று கோரிவருகிறார்.



# ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சத்யப்ரிய லியனகே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டார்

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தலைமை அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சத்யப்ரிய லியனகே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று அவர் சந்தித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக அவர் பதவியேற்பதற்கு முன்னர், இராணுவ தன்னார்வ படையின் கட்டளை அதிகாரியாக செயற்பட்டார்.

அவர் மேற்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தளபதி பதவி உட்பட பல பதவிகளை வகித்துள்ளார்.

சத்யப்ரிய லியனகேவை கட்சியின் ஊழல் எதிர்ப்பு கொள்கை மற்றும் அமுலாக்கல் பிரிவின் தலைமை அதிகாரியாக சஜித் பிரேமதாஸ நியமிக்கவுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஊழல் எதிர்ப்பு பயணத்தில் ஆலோசகராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.






# ஆர்.ஆரின் இறுதிக்கிரியை நிகழ்வு பற்றிய அறிவித்தல்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இயக்கத்தின் (புளொட்) மூத்த தளபதிகளுள் ஒருவரான தோழர் இராகவன் அல்லது ஆர்.ஆர். என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதரின் இறுதிக் கிரியை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இயக்கம் (புளொட்) விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இயக்கத்தின் மூத்த தளபதிகளுள் ஒருவரும், அதன் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உப தலைவரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளருமான தோழர் இராகவன் அல்லது ஆர்.ஆர். என



அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இணைந்திருந்து - தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை முழுமையாக அர்ப்பணித்த ஒரு மூத்த போராளியே ஆர்.ஆர். ஆவார்.

தோழர் ஆர்.ஆரின் வித்துடலுக்கான வணக்க நிகழ்வுகள் 16 ஹேக் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை காலை 9:00 மணி முதல் 12:00 மணி வரையிலும், அதனைத் தொடர்ந்து, வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவில்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கமும் நடைபெறும்.

பின்னர், முற்பகல் 11 மணிக்கு இறுதி நிகழ்விகள் நடைபெற்று தோழர் ஆர். ஆரின் வித்துடல் வவுனியா கோவில்குளத்தில் நல்லடக்கம் செய்யப்படும். - என்றுள்ளது.



# மீனவர்கள் சாகும் வரை உண்ணாவித போராட்டம்: இராமேஸ்வரம் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்



இலங்கை சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று முதல் சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ள மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையின ரால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள ஐந்து மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி தங்கச்சிமடம் பேருந்து நிலையத்தில் இன்று காலை முதல் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட போவதாக தங்கச்சிமடத்தில் நேற்று நடைபெற்ற மீனவர்கள் அவசர ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள் ளது.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க சென்று இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மூன்று மீன்பிடி விசைப்படகு ஓட்டுனருக்கு ஆறு மாத கால சிறை தண்டனையும் ஒரு மீனவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும், மற்றொரு மீனவருக்கு இரண்டு வருட சிறை தண்டனையும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.


அதற்கமைய , நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை ரத்து செய்யக் கோரியும், இலங்கை சிறையில் உள்ள ஐந்து இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி யும் இன்று காலை தங்கச்சிமடம் வலசை பேருந்து நிலை யத்தில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் ஆரம்பிக் கப்படுகிறது.

மேலும் கடந்த 16 ஆம் திகதியிலிருந்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்து விசைப் படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல் வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக் கது.



# பிரதமர் மோடி - ராகுல் காந்தி வார்த்தைப் போர் பிரசாரங்கள்





"மதி இழந்தவர் என் காசியின் குழந்தைகளை குடிகாரர்கள் என்று அழைக்கிறார்" என்று ராகுல் காந்தியை பிரதமர் மோடி கடுமையாக சாடியிருந்தார்.

இந்த நிலையில், அதே பாணியில் ராகுல் காந்தி பதிலடி கொடுத்திருக்கிறார் .

உத்தரப் பிரதேச இளைஞர்களை மோடி வஞ்சிக்கின்றார் என கூறியுள்ள ராகுல் காந்தி, பொலிஸ் தேர்வு கேள்வித்தாள் கசிவு விவகாரத்தை சுட்டிக்காட்டி, "பிரதமரின் பிரச்சாரங்கள் எல்லாம் பாட்டிக்கே அவரது தாய்வீட்டுப் பெருமையை கதை யாகச் சொல்வது போல் இருக்கிறது" என்று கிண்டல் செய்துள் ளார்.

இது தொடர்பாக ராகுல் காந்தி தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில்,

"லக்னோவில் இருந்து பிரயாக்ராஜ் வரை இளைஞர்கள் வீதிகளில் இறங்கி பொலிஸ் தேர்வு வினாத்தாள் கசிந்த விவகாரத்துக்காக கோஷம் எழுப்பி வருகின்றனர். ஆனால் அங்கிருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் வாரணாசியில் இருக்கும் பிரதமர் இளைஞர்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இது எப்படி இருக்கிறது தெரியுமா? பாட்டியிடம் சென்று அவர் தாய் வீட்டுப் பெருமையை கதையாக சொல்வதுபோல் இருக்கிறது" என்று கிண்டல் செய்துள்ளார்.

பிரதமர் பேசியதுபோலவே ஒரு சொலவடையை சுட்டிக் காட்டி பதிலடி கொடுத்துள்ளார் ராகுல் காந்தி. அவரது இந்த பதிவுக்கு கீழ் காரசார விவாதங்கள் நடந்து வருகின்றன. அந்த பதிவுடன் ராகுல் உத்தர பிரதேச இளைஞர்களின் போராட்ட வீடியோ ஒன்றையும் இணைத்துள்ளார்.

முன்னதாக, வாரணாசி வீதிகளில் மது அருந்திய மக்கள் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்தேன் என்று ராகுல் காந்தி கூறிய கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்த பிரதமர் மோடி, "மதி இழந்தவர் என் காசியின் குழந்தைகளை குடிகாரர்கள் என்று அழைக்கிறார்" என்று சாடியிருந்தார்.

"ஒவ்வொரு தேர்தலின்போதும் எதிர்க்கட்சிகள் ஒன்றாக கூடுவது வழக்கம். இறுதியில் முடிவு பூஜ்ஜியமாக வந்ததும், அவர்கள் பிரிந்து ஒருவர் மற்றவரை துஷ்பிரயோகம் செய்பவர்கள். இந்த முறையும் ஒட்டுமொத்த இந்தியாவின் எண்ணமும் மோடி உத்தரவாதத்துக்கு ஆதரவாக உள்ளது." என்று பிரதமர் மோடி பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

# சென்னை மேயர் பிரியா விபத்தில் சிக்கினார்



சென்னை மாநகர மேயர் பிரியா பயணித்த கார் பூந்த மல்லியை அடுத்துள்ள சென்னீர்குப்பம் பகுதியில் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் மேயர் பிரியாவுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சென்னை மாநகராட்சி மேயர் நேற்று இரவு பூந்தமல்லி யில் இருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்தார். சென்னீர்குப்பம் மேம்பாலத்தில் இருந்து இறங்கிய போது மேயர் பிரியா வந்த காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கார் திடீரென பிரேக் பிடித்ததால், பின்னால் வந்த மேயரின் கார் கட்டுப்பாட்டை இழந்து அந்தக் காரின் மீது மோதியது. இதில் மேயர் பிரியா பயணித்த காரின் முன்பக்கம் நொருங் கியது.

அதேநேரம், மேயர் பிரியாவின் காரின் மீது பின்னால் வந்த லொறி ஒன்று மோதியது. இந்த இரண்டு வாகனங் களுக்கு மத்தியில் மேயர் பிரியாவின் கார் சிக்கியதால், வாகனத்தின் இரண்டு புறங்களும் சேதமடைந்தன. இந்த விபத்தில், மேயர் பிரியாவுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

மேயர் பிரியா வந்த வாகனம் விபத்தில் சிக்கியதை அறிந்த பொலிஸார் காரிலிருந்து அவரை மீட்டனர். பின்னர் மாற்று வாகனத்தில், மேயர் பிரியாவை பொலிஸார் சென் னைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் சிக்கிய வாகனங் களை அப்புறப்படுத்திய பொலிஸார், இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காசா போருக்குப் பின் இஸ்ரேலின் திட்டம் புதிய தகவலை வெளியிட்டார் நேதன்யாகு



இஸ்ரேல் – காசா போர் நீடித்து வருகின்றது. இந்த ஹமாஸ் குழுவை ஒழிக்கும் வரை தாக்குதல் தொடரும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்து வருகிறார்.

இந்த சூழலில், காசா போருக்கு பிந்தைய திட்டம் குறித்த விவரங்களை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு வெளியிட்டிருக்கிறார். நெதன்யாகு தனது அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்த திட்டத்தில் இது குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, போருக்குப் பின்னர் நடக்கவிருக்கும் திட்ட வரையறையை நேதன்யாகு முதன்முறையாக பொதுவெளியில் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில், காசாவை நிர்வகிப்பதில் இஸ்ரேலின் பங்கு என்ன என்பதை நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். அதாவது, ஹமாஸ் மீதான போர் முடிவடைந்த பின்னர் இராணுவம் விலக்கப்பட்ட காசா முனையின் பாதுகாப்பு, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும். சிவில் விவகாரங்களில் இஸ்ரேல் பங்கு வகிக்கும்.

பாதுகாப்பு அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில், காசா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் சுதந்திரமாக செயல்படும். மேலும், காசாவுக்குள் ஒரு பாதுகாப்பு மண்டலத்தை நிறுவும். ஆனால், இந்த திட்டத்துக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் அல்லது அமைப்புகளுடன் தொடர்பில் இல்லாத மற்றும் அவர்களிடமிருந்து நிதியுதவி பெறாத உள்ளூர் அதிகாரிகளால் காசா நிர்வகிக்கப்படும் என்றும் இந்த திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் திட்டத்துக்கு பாலஸ்தீனியர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்களா என்பது தெளிவாக தெரியவில்லை. பல ஆண்டுகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் பாலஸ்தீன ஆளும் அமைப்புகளை உருவாக்க இஸ்ரேல் பலமுறை முயற்சி செய்து தோல்வியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் அமைப்பினர் பாலஸ்தீன சமூகத்தில் ஆழமாக வேரூன்றிவிட்டனர் என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. எனவே, அவர்களை முற்றாக ஒழிக்கவேண்டும் என்ற இலக்கை இஸ்ரேல் அடைய முடியாது என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். 2007 இல் காசா பகுதியை ஆக்கிரமித்த பயங்கரவாதக் குழுவான ஹமாஸை நசுக்க இஸ்ரேல் உறுதியாக உள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

# சீனாவில் சுமார் 100 கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து



சீனாவின் சௌச்சோவ் நகரில் உள்ள வீதியொன்றில் சுமார் 100 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

சௌச்சோவ் நகரை பாதித்த கடும் பனிப்பொழிவு காரணமாக இந்த வாகன விபத்து ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் ஆறு பேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் சுஸ்ஹோவ் மாகாணத்தில் அதிவேக சாலையில் கடும் பனி மூட்டம் காரணமாக சாலை தடம் தெரியாமல் வேகமாக வந்த கார்கள் ஒன்றுடன் ஒன்று அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் நூறுக்கு மேற்பட்ட கார்கள் சேதமடைந்துள்ள நிலையில், காருக்குள் பலர் சிக்கி வெளிவர முடியாமல் தவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான காணொளிகள் தற்போது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

கடும் பனிப்பொழிவு தொடர்பில் சீன வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், அந்த பகுதியின் அதிவேக வீதிகள் மூடப்பட்டிருந்தன.

இதனை மீறி வாகனங்கள் அந்த பகுதிக்குள் பிரவேசித்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது.

# நோயாளிகளை வெளியேற்றுவதில் ஐ.நா ஊழியர்களுக்கு கடும் சிரமம்




நாசர் மருத்துவமனையில் இருந்து கடுமையாக நோய்வாய்ப்பட்ட நோயாளிகள் மற்றும் குடும்பங்களை வெளியேற்றுவதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என ஐ.நா. ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவின் தெற்கு கான் யூனிஸ் பகுதியில் இஸ்ரேலியப் படைகளால் முற்றுகையிடப்பட்டு சோதனை செய்யப்பட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, மேற்படி மருத்துவமனைக்குள் தண்ணீர் மற்றும் மின்சாரம் இல்லை என்றும் மருத்துவப் பொருள்கள் குறைவாக உள்ளன எனவும் ஐ.நா. ஊழியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.